உ
ஓம்
தத்ஸத்

# சத்திய நெறி

## மாதாந்தப் பத்திரிகை
## பூரணை தோறும் வெளிவருவது




தொகுத்து வெளியிடுபவர்

ச. பொன்னுத்துரை
24/1 சிவப்பிரகாசம் ரோட்
யாழ்ப்பாணம்



சௌமிய வருஷம் பங்குனி மாதம் 9-ம் திகதி
22-3-70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
தத்ஸத்

# சத்திய நெறி

வருட சந்தா ரூ. 6-00 | தனிப்பிரதி ச. 50

## ஓர் மாத சஞ்சிகையாக
## வெளிவருவது

மலர் 1 செளமிய வருஷம் பங்குனித் திங்கள் இதழ் 2
9-ம் திகதி ஞாயிறு பூரணை (22-3-70) யாழ்ப்பாணம்

# தாயுமானார்

அங்கிங்கெனாத படி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்தது எது அது தன் அருள்
வெளிக்குளே அகில அண்டகோடியெல்லாம்
தங்கும்படிக்கு இச்சை வைத்து
உயிர்க்குயிராய் தழைத்ததெது
மனவாக்கினில் தட்டாமல் நின்றதெது
அது சமயகோடிகளெல்லாம்
தன்தெய்வம் என் தெய்வமென்று
எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும்
நின்றதெது அது எங்கணும்
பெருவழக்காய்யாதினும் வல்ல
ஒரு சித்தாகி யின்பமாம் என்றைக்கும்
உள்ளதெது மேல் கங்குல் பகல்
அறநின்ற எல்லையுளதெது அது
கருத்துக்கு இசைந்தது அதுவே
கண்டனவெலாமோன உருவெளிய
தாகக் கருதி அஞ்சலி செய்குவாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டாவது இதழில் வெளிவருபவை

1. வர்ணாச்சிரம தர்மம் முற் தொடர்
2. சத்திய தரிசனம் மகாத்மாஜீ
3. அரும் பொருள் விளக்கம்
4. மூலக்கல்வி கொள்கைபற்றி மகாத்மாஜீ
5. இயற்கைச் சிகிச்சைபற்றி மகாத்மாஜீ
6. இராமநாமம் மகாத்மாஜீ
7. கேள்வியும் பதிலும் மகாத்மாஜீயின் மணி மொழி
8. சுவாமி விபுலானந்தர் (அடிமைக்குண்டோ வருணம்)
9. இராமகிருஷ்ண பரமகம்சர் முற் தொடர்
10. சுவாமி விவேகானந்தர் முற் தொடர்
11. திருமூலர் திருமந்திரம் முற் தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய தரிசனம்

## மகாத்மாஜீ

சத்திய உபாசகர் மகாத்மாஜீ சத்தியமே கடவுள் என்பது
அவர் கண்ட தரிசனம். உலகம் உய்ய அதை உபதேசித்து வரு
கிறார். அவர் வாழ்வு முழுவதும் சத்திய சோதனையே: அதனால்
தான் தன்சுய சரிதத்திற்கும் சத்திய சோதனையென்றே பெயரி
ட்டிருக்கிறார். சத்தியத்தைப் பற்றி அம்மகான் குறிப்பிட்டிருப்
பதை இச்சமயம் ஞாபகத்திற்குக் கொண்டு வருவது பொருத்
தமானதாகும்.

### மகாத்மாஜீ கூறுகிறார்

ஒழுக்கத்தைப் பற்றிய
அஹிம்சை, பிரமச்சரியம், மற்றும் வேறானவை என்று
கொள்கைகள் எல்லாம் சத்தியத்தினின்றும் சத்தியத்தினுள்
சாதாரணமாகக் கருதப்படுகின்றது' அதனால்
இவையெல்லாம் அடங்கும் என்பது என்மதம்?
உள்ளத்தின் உண்மை
சத்தியம் என்பது வாய்மை மட்டுமன்று நித்தியதத்துவமு
மையும் அது குறிப்பிடும். சத்தியவஸ்துவும்' நாமரூபங்கள்
மான இறைவனையும் குறிக்கும். ஆண்டவனின் எண்ணும்போது நான்
எண்ணிலடங்காதவை, அவற்றைப்பற்றி கணநேரம்
அளவிலா ஆச்சரியமும் அச்சமும் அடைந்து ஒரு
ஸ்தம்பித்து விடுகிறேன் ஆனால் அவனை நான் வழிபடுவது சத்
திய வடிவிலேயாம்.

அவனுடைய தரிசனம் எனக்கு இன்னும் கிட்டவில்லையாயி
னும், அவனைத்தேடிக்கொண்டே இருக்கிறேன், இம்முயற்சியில்
என் உயிரையே தியாகம் செய்யவேண்டி வந்தாலும் அதற்குச்
சித்தமாய் இருப்பேனென்பது என் நம்பிக்கை, ஆனால்சத்தியப்
பொருளான பகவானின் தரிசனம் கிட்டும் வரையில் எனக்கு
த்தெரிந்த சாதாரண சத்தியத்தையே நான் பற்றுக்கோடாகக்
கொள்ளவேண்டும்?

அதுவரை அச்சாதாரண சத்தியமே எனக்கு வழிகாட்டும்
ஒளியாகவும், என்னைப்பாதுகாக்கும் கேடயமாகவும், இருத்தல்
வேண்டும் இச்சத்தியமார்க்கம் கத்தியின் விளிம்பைப்போல
நேரியதாயும், குறுகலானதாயும், கூர்மையுடையதாயும், இருப்
பினும்: அதுவே எனக்கு விரைவில் செல்லக்கூடிய எளிதான வழி
யாயிருந்து வந்திருக்கிறது.

நான் இவ்வழியினின்று அணுவளவும் வழுவாது நடந்து வந்
திருப்பதால்தான் நான் செய்திருக்கும் ஹிமாலயத்தைப்போன்ற
பெருந்தவறுகளும் அற்பமானவையாகத் தோன்றி வந்திருக்கின்
றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய தரிசனம்

ஏனெனில் அத்தவறுகளால் நான் அழிந்துவிடா வண்ணம் அவ்வழி என்னைக் காப்பாற்றி வந்திருக்கிறது எனக்குத்தெரிந்த ஒளியின் அளவாக நானும் முன்னேறிவந்திருக்கிறேன் இம்மார்க்கத்தில் நான் முன்னே செல்லுகையில் சத்தியப் பொருளான இறைவன் பலமுறைகளில் மங்கிய மின்னலைப்போல் என்முன் தோன்றி மறைந்திருக்கிறான். அவன் ஒருவனே மெய்ப்பொருள் மற்றவையெல்லாம் பொய்யென்னும் என் உறுதி நாள்தோறும் வலுவடைந்து வருகிறது.

சத்திய தரிசனத்துக்குரிய சாதனங்கள் ஒருவகையில் மிக எளியவை மற்றொருவகையில் அவை கடினமானவையேயாம், இறுமாப்புக்கொண்ட ஒருவனுக்கு அவை அசாத்தியமானவையாகப் படலாம் ஆனால் கபடமற்ற குழந்தை ஒன்றுக்கு அவை முற்றும் சாத்தியமானவை சத்திய ஆராய்ச்சியில் இறங்குவோன் தூசியை விடத் தாழ்மைகொள்ள வேண்டும், உலகம் தூசியைத் தன்காலில் வைத்து நசுக்குகிறது.

ஆனால் சத்திய ஆராய்ச்சியில் ஈடுபட்டவன் அத் தூசியும் தன்னை நசுக்கக் கூடியவாறு தன்னைத் தாழ்மைப் படுத்திக்கொள்ள வேண்டும் அப்போதுதான் அவனுக்கும் சத்தியதரிசனம் ஒருகண நேரமேனும் சித்தியாகும், அதுவரை சித்தியாது என்பது நிச்சயம்,

அஹிம்சையென்பது விரிந்தபொருள் பொதிந்த கொள்கை நாமெல்லோரும் ஹிம்சையென்னும் பெருந்தீயில் அகப்பட்டுத் தத்தளிக்கும் நிலையிலுள்ள மாந்தர்களாவோம் உயிரைத்தின்று உயிர் வாழ்கிறது என்னும் கூற்றில் ஆழ்ந்த கருத்து உண்டு அறிந்தோ அறியாமலோ ஹிம்சைசெய்யாமல் மனிதன் ஒரு கணமேனும் உயிர்வாழ முடியாது, அவன் உயிர்வாழ்வதனாலும் உண்ணலும் குடித்தலும் அசைதலும் உயிர்க்கொலையின்றி நடவாதவை அந்த ஹிம்சை மிக நுட்பமாக யிருக்கலாமெனினும் ஹிம்சை செய்தே தீரவேண்டும்.

இந்நிலைமையில் அஹிம்சை விரதம் கொண்டோனின் கடமை என்ன. தான் செய்யும் செயல் எல்லாவற்றிற்கும் கருணையே அவன் பிறப்பிடமாகக் கொண்டானாயின் தன்னால் இயன்றளவு மிகச்சிறு உயிரையும் கொலை செய்தலை விலக்கி அதைக்காப்பாற்ற முயல்வானாயின் இவ்வாறு இடைவிடாது ஹிம்சையின் மரணபாசத்தினின்றும் விடுதலை பெற முயன்று வருவானாயின் தன் விரதத்தைக் காப்பாற்றியவனாவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்திய தரிசனம்

இந் நிலைமையில் அஹிம்சை விரதம் கொண்டோன் அவனுடைய புலனடக்கமும் கருணையும் ஓயாமல் வளர்ச்சிபெற்றுக் கொண்டே வரும் ஆனால் புறஹிம்சையிலிருந்து அவன் முற்றும் விடுதலை பெறல் ஒருநாளும் இயலாத காரியம் மற்றும் அஹிம்சையின் அடிப்படை சர்வ சீவ ஒருமைப்பாடேயாகலின் ஒரு ஜீவனின் தவறு மற்றவர்களைப் பாதிக்காமற்போகாது. இம்முறையிலும் மனிதன் ஹிம்சையினின்று அறவே நீங்க இயலாது அவன் சமூகத்தில் ஒரு அங்கத்தவனாக இருக்கும் வரையில் சமூகம் நிலைத்திருப்பதற்கே ஆதாரமான ஹிம்சையில் கலந்து கொள்ளாதிருக்க முடியாது.

இரு தேசங்கள் சண்டையிடுவதால் அஹிம்சா தர்மியின் கடமை யுத்தத்தை நிறுத்துவதாகும் அக்கடமையைச் செய்ய ஆற்றலில்லாதவன், யுத்தத்தை எதிர்த்து நிற்கும் சத்தியில்லாதவன். அதற்குவேண்டிய தகுதி பெறுதலன் யுத்தத்திலீடுபட்டாலும, அதே சமயத்தில் மனப்பூர்வமாகத் தன்னையும் தன் தேசத்தையும் உலகத்தையும் யுத்தத்தினின்றும் விடுவிக்க முயலலாம்.

சத்திய உபாசகன் எப்போதும் திருத்தப்படுவதற்குச் சித்தமாயிருக்க வேண்டும், தான் செல்லும்வழி தவறானது என்று அவன் கண்டால் உடனே என்ன நேர்வதாயினும் அதை ஒப்புக் கொண்டு அதற்குப்பரிகாரம் தேடவேண்டும்.

(முற்றும் மகாத்மாஜீயின் கட்டுரை)

# அரும் பொருள் விளக்கம்

# இராகத்து வேஷாதி

தோன்றும் குணங்கள் பத்தும் நீக்கிப் பின் மூன்று குணங்கொள் போகுந்தீபறமும் மூட்சுகளாவரென்றுந் தீபற

### திருவுந்தியார்

1-வது நீக்கும் குணங்கள் பத்தின் விபரமும் விளக்கமும்

(1) காமம், குரோதம், லோபம் மோகம், மதம் மச்சரம், ஈரிசை அசூயை டம்பக், தர்ப்பம் (ஆக-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 வது. காமம் என்பது:— கிருஷிக்கிராம க்ஷேத்திர தன தான்யாதிகள் மேலும் மேலும் சம்பாதிக்க வேண்டும் என்றுவருகிற சித்தவிருத்தி.

2 வது, குரோதம் என்பது:– தான் சம்பாதிக்கும் வஸ்துவை எவன் விக்கினம் பண்ணுகிறானோ அவன்பேரில், வியாக்கிர ரூபமாய் சீறிவருகிற சித்தவிருத்தி.

3 வது, லோபம் என்பது:- அங்ஙனம் பிரயாசையடைந்து தான் சம்பாதித்த பொருளை எந்த விஷயத்திலும் செலவு பண்ணலாகாதென்று வருகிற சித்தவிருத்தி.

4 வது, மோகம் என்பது:- தான் சம்பாதித்த பதார்த்தங்களிடத்தில் பிரிய மோதப் பிரமோதமாய் வருகிற சித்தவிருத்தி

5 வது, மதம் என்பது:- ஐஸ்வரியகோலாகலத்தினால் கர்வித்துக் கிருத்தியா கிருத்தியங்கள் அறியாமல் விகற்பித்து வருகிற சித்தவிருத்தி.

6 வது, மச்சரம் என்பது:- ஒருவன் தன்னிலும் அதிக பாக்கியவந்தனாயிருந்தால் அவன் செல்வத்தைப் பார்க்க சகிக்காமல் வருகிற சித்தவிருத்தி.

7 வது, ஈரிஷை என்பது:- பிறருக்குத் துக்கம்வரவேண்டுமென்றும் தனக்கு வரக்கூடாது என்றும் எண்ணுகிற சித்தவிருத்தி

8 வது. அசூயை என்பது:- தனக்குச் சுகம் வந்ததுபோல மற்றொருவருக்கு வரக் கூடுமா வென்று விகற்பித்துவருகிற சித்த விருததி.

9 வது, டம்பம் என்பது:- தான் செய்கிற தான தருமங்களைப் பலருமறிந்து தன்னை (சபாஷ் என்று) வியந்து மெச்ச வேண்டும் என்று வருகிற சித்தவிருத்தி.

10 வது, தர்ப்பம் என்பது:— நானே (தொண்டைமான்) பெரியவன் மற்றவர்கள் எல்லாம் எனக்குச் சரியாவார்களா என்று எண்ணுகிற சித்தவிருத்தி.

## கொள்ளுங் குணங்கள் மூன்றுவன

# இச்சை, பக்தி, சிரத்தை,

இச்சை (1) இச்சை என்பது:- உண்ணுதல் மலசலம் விடுதல் முதலிய அவசியமான கிரியைகளைச் செய்ய வேண்டுமென்று வருகிற இடத்து நிகழும் சித்தவிருத்தி.

பக்தி (2) பக்தி என்பது குரு, தேவதைகளிடத்தில் வருகிற பிரீதி.

சிரத்தை (3) சிரத்தை என்பது:- குரு, வேதாந்த வாக்கியாதிகளிடத்தில் வருகிற வியவகாரம் (விசாரம்) விசுவாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகாதி மூன்று

அவை வருமாறு

1-வது இராகம் (2) துவேஷம் (3) அகங்காரம்

இராகம்

1-வது (1) இராகம் என்பது:- ஸ்திரீவிஷயமான சித்தவிருத்தி மற்றொரு பொருள்:- பெற்றதைச் சிறிதாக்கிப் பெருத்தில் இச்சை (வைப்பது) கொள்வது

துவேஷம் (2) துவேஷம் என்பது:- ஒருவன் அபகாரம் பண்ணினால் அவ்வபகாரத்துக்குப் பிரதி அபகாரம் பண்ண வேண்டும் என்ற சித்தவிருத்தி.

அகங்காரம் (3) அகங்காரம் என்பது:- ஆ! என்னையறியாயா நீயா என்னைத்தண்டிக்கிறவன் நான் பிடித்த காரியத்தை விடுவேனு என்று விகற்பித்து வருகிற சித்த விருத்தி. (தொடரும்)

# மகாத்மாஜீயின் மூலக்கல்விக் கொள்கை

இவை தமிழ்ஹரிசன் பத்திரிக 11-8-46ல்இருந்து எடுத்வை
காங்கிரஸ் மந்திரிசபையும் மூலக்கல்விக் கொள்கையும்

காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜினமா செய்தபின் நடந்த கவர்னர் ஆட்சியில் நடத்தப்பட்ட அழிவு வேலையில் தலைசிறந்தது. மூலக் கல்வித்திட்டத்தையும் மதுவிலக்கையும், கிராமக் கைத்தொழில் புனர் நிர்மாணத்திட்டத்தையும் ஒழித்துவிட்டது தான.

ஆதலால் இப்பொழுது காங்கிரஸ் மந்திரிசபைகள் செய்ய வேண்டிய முதல்வேலை. அத்திட்டங்களை மறுபடியும் நடத்தி வைப்பதுதான் காங்கிரஸ் கல்விமந்திரிகள் 29-ம் திகதியும் 30ம் திகதியும் ஸ்ரீ பாலாசாஹிப் கெர்தலைமையின்கீழ் மகாநாடு கூடினார்கள் 29-ந் திகதி பிற்பகல் காந்தியடிகள் அந்தமகாநாட்டுக்கு ஒருமணி நேரம் போயிருந்தார்.

சர்க்கார் மூலக்கல்வியை நடத்தாமலிருந்து விட்டாலும், காந்தியடிகளின் முன்யோசனையின் காரணமாக தாலிமிசங்கத்தார் அதைநடத்திக்கொண்டே வந்தார்கள் அது ஏழுவருஷங்கள் நடந்து பருவமடைந்திருக்கின்றது காந்தியடிகள் 1944ல் விடுதலை பெற்றதும் தாலிமிசங்கத்தாரிடம் மூலக்கல்வியை விரிவுபடுத்த வேண்டியகாலம் வந்துவிட்டதாகக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலக்கல்வி ஆரம்பத்துக்கு முன்னும் இறுதிக்குப் பின்னும் கல்வி கொடுக்கவேண்டுமென்றும் மூலக்கல்வியானது வாழ்வுக்கு வேண்டிய கல்வியாக ஆகவேண்டும்என்றும்சொன்னார், எந்தவிதத்தில் மூலக்கல்வியை விரிவுபடுத்துவதென்பது பற்றியும் அந்த மகாநாட்டில் விளக்கிச் சொன்னார்.

டாக்டர்ஜாகிர்ஹுசேன்சொன்னார்மெல்லமுடியாதஅளவுவாயில் போட்டுக்கொள்ள ஆத்திரப்படக் கூடாது என்பதாக)

## மூலக் கல்விபற்றி மகாத்மாஜீ

காந்தியடிகள் கூறியதாவது என்ன செய்யவேண்டுமென்று எனக்குத்தெரிகிறது. ஆனால் எப்படிச்செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை உங்களுடைய கஷ்டங்களை அறிவேன், பழயரீதியிலிருந்து திடீரென்று புதிய ரீதிக்கு மாறுவது எளிதான காரியமன்று நான் மந்திரியாயிருந்தால் இனி மூலக்கல்விதான் கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுவேன்.

அனேக மாகாணங்களில் முதியோர் கல்வித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன அவற்றையும் மூலக்கைத்தொழில் மூலமாகவே நடத்தல் வேண்டும் இந்த விஷயத்துக்கு நூல் நூற்பதும் அது சம்பந்தமான முறைகளும் முதல் தரமான மூலக் கைத்தொழிலாகும் ஆனால் தகுதியுடையதே தங்கும் என்று நம்புவதால் இதைப்பற்றி நான் வற்புறுத்தவில்லை,

சர்க்கார்உத்தியோகஸ்தர்களும்ஆசிரியர்களும்சர்க்காருடைய புதுக்கல்விக்கொள்கையின் நன்மையைப் பற்றிப் பிரசாரஞ் செய்ய வேண்டும் அவர்களுக்கு அதிகநம்பிக்கையில்லையானாலும் அதை நடத்திவைக்கப் பிரியமில்லை யானாலும் அவர்கள் ராஜினமா செய்துவிடவேண்டும் ஆனால் மந்திரிகள் முனைந்து நிற்பார்களானால் அம்மாதிரி நிலைமை உண்டாகமாட்டாது; உத்தரவு இடுவதனால் மட்டுமே காரியம் சித்தியாகி விடமாட்டாது

### சர்வ கலாசாலைச் சீர் திருத்தம்

முதியோர் கல்வியைப் பற்றிச் சொன்னதெல்லாம் சர்வ கலாசாலைக் கல்விக்கும் பொருந்தும் அதுவும் இந்தியவாழ்க்கைக்கு ஒத்ததாக அமையவேண்டும் அதனால் சர்வகலாசாலைக் கல்வியானது மூலக்கல்வியின் தொடர்ச்சியாகவே இருக்கவேண்டும் இதுதான் முக்கியமான விஷயம்,

இந்தமாதிரி உங்களுக்குத் தோன்றவிட்டால் என்னுடைய ஆலோசனையைக் கேட்பதில் உங்களுக்கு எவ்வித பிரயோசனமுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வகலாச்சாலைக் கல்வி சுதந்தரத்துக்குத் தகுதியாக்காமல் அடிமைத்தனத்துக்கே தகுதியாக்குகிறது என்று நான் எண்ணுவது போலவே நீங்களும் எண்ணினால் என்னைப்போலவே நீங்களும் தேசத்தின் தேவைக்கு ஒத்த புதுமுறையில் அதை அடியோடு மாற்றியமைக்க ஆத்திரப்படுவீர்கள்

இன்று சர்வகலாச்சாலையில் தோன்றும் மாணவர்கள் சர்க்கார் வேலைக்காக அலைகிறார்கள் அது கிடையாவிட்டால் குழப்பங்கள் உண்டுபண்ண முற்படுகிறார்கள் பிறரைச்சார்ந்து நிற்கவும் பிறரிடம் இரக்கவும் அவர்கள் வெட்கப்படுவதில்லை அவர்களுடைய துக்ககரமான நிலைமை அது.

சர்வகலாசாலை நோக்கமெல்லாம் தேசத்தின் சுதந்திரத்துக்காகச் சேவை செய்யவும் உயிர் துறக்கவும் கூடிய உண்மையான பொதுசன ஊழியர்களை உண்டாக்குவது ஒன்றுதான் ஆதலால் தாலிமிசங்கத்திலுள்ள ஆசிரியர்களை உபயோகித்து சர்வகலாச்சாலைக்கல்வியை மூலக்கல்வியோடு இணைக்கவேண்டியது அவசியமாகும் மந்திரிகள் ஜனங்களுடைய பிரதிநிதிகள் அதனால் பொதுஜன ஆதரவு இல்லாவிட்டால் மந்திரிகள் தங்களுடைய உத்தரவுகளைக் கொண்டே மூலக்கல்வியாகிய சிறு செடியைப்பெரிய மரமாக வளர்த்துவிட முடியாது.

பொதுஜன ஆதரவு இல்லாவிட்டால் மந்திரிகள் உடனே ராஜிநாமாச் செய்யவேண்டியதுதான் அராஜகம ஏற்படுமோ என்று அஞ்சவேண்டியதில்லை கடமையைச் செய்யவேண்டும் என்றார்

மேலும் மகாத்மாஜீ கேள்விகள் கேட்க விரும்புகிறவர்கள் கேட்கலாம் என்றார் (கேள்விபதில் தொடர்ந்துவரும்)

## மகாத்மாஜீயின் இயற்கைச் சிகிச்சை

உருலிகஞ்சன் 2-8-46 ஹரிஜனபந்துவிலிருந்து

இயற்கைச்சிகிச்சையை அறிந்து கொள்வதற்காக அனேகர் உருலி கஞ்சானுக்கு வரவிரும்புகிறார்கள் இந்தக்கிராமத்தில் நடக்கும்வேலை டக்டர் டின்ஷா மேக்தா திரு ஜிவாங் கிர்படேல் நான் ஆகிய மூவரின் சார்பாக தலை[illegible]றுவருகிறது நாங்கள் மூவரும் அந்த ஆச்சிரமத்துக்கு தரு[illegible]தராக்கள் டக்டர் டின்ஷா மேத்தா இயற்கைச்சிகிச்சையில் அனுபவ பெற்ற வைத்தியர் ஆனால் அவர் அனுபவம்பெற்ற[illegible]லாம் நகரங்களிலேயேதான்

அவர் புனுவிலுள்ள தமது ஆஸ்பத்திரியில் எளிய ஜனங்களையும் சேர்த்துக் கொள்வது வழக்கம் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குச் செய்யும் சிகிச்சையையே செய்து வந்தார் கிராமங்களில் கிடைக்கக் கூடிய பொருளைக்கொண்டு செய்யக்கூடிய இயற்கைச்சிகிச்சைதான் மக்களுக்கு ஏற்றது என்பது எனது அபிப்பிராயம்

உதாரணமாகக் கிராமங்களில் ஏற்படுத்தும் இற்கைச்சிகிச்சைச்சாலைகளில் மின்சாரத்துக்கும் பனிக்கட்டிக்கும் இடம் கிடையாது கிராமமனப்பான்மை கொண்டவராயும் நகரங்களில் வசித்தாலும் கிராமத்தைப்பற்றியே எப்பொழுதும் எண்ணிக்கொண்டிருப்பவராயும் உள்ள என்னைப்போன்றவர்தான் இத்தகைய வேலையைச்செய்ய முடியும் ஆதலால்தர்மகர்த்தாக்கள்வேலைமுழுவதையும் என்னிடத்தில் விட்டிருக்கிறார்கள்

நான் வேலையை ஆரம்பித்து விட்டபோதிலும் எனக்கு உதவி செய்யப்பயிற்சி பெற்றவர்கள் யாருமில்லை தேவைப்படும் பொழுதுடாக்டர்மேத்தாவின்உதவியைப்பெற்றுக்கொள்கிறேன் என்பது வேறுவிஷயம் டக்டர் பகவத் எனக்குநல்ல உதவி செய்கிறார் அவருடைய மனம்முழுவதும் கிராமவாழ்க்கையிலே படிந்திருக்கிறது எளியமுறையிலேயேவாழ்க்கையையே நடாத்திவருகிறார் ஆங்கில வைத்தியராக இருந்தபோதிலும் இயற்கைவைத்தியத்தில் பரிபூரண நம்பிக்கையுடையவராக இருக்கிறார்.

எந்தவேலையையும் அதிகமென்றோ அகௌரவமென்றோ அவர்கருதுவதில்லை சோர்ந்துபோய் உட்காருவதே கிடையாது மற்றவர்கள் எல்லோருக்கும் இந்தவேலை புதிது ஆனால் அவர் சேவை செய்யவேண்டுமென்ற ஆசை அதிகம் உடையவராக இருக்கிறார்.

இந்த வேலை எனக்கும் புதிதுதான் திரு. தத்நர் வாடகை வாங்கிக் கொள்ளாமலே தம்முடைய வீட்டை எங்களுக்குத்தாராளமாகக் கொடுத்திருக்கிறார் ஆனால் தந்தவீடு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும் போதிய அளவு பெரிதாகஇல்லை.

நானும் உருலி ஆச்சிரமத்தில் சாஸ்வதமாக வசிக்கவில்லை இனிமேல் ஆறுமாதம் புனுவிலும் ஆறுமாதம் சேவாக்கிரமத்திலும வசிக்கவிரும்புகிறேன் ஆகையால் இயற்கை வைத்தியத்தைக் கற்க விரும்புகிறவர்கள் இப்பொழுது இந்தக்கிராமத்துககு வருவதில் பிரயோசனமில்லை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாமம் சஞ்சீவி மருந்து மகாத்மாஜீ

சிலநாட்களாக மகாத்மாஜீ அவர்கட்கு இருமல்வியாதி உண்டாகியது அனேகர் கவலையுடன் கடிதம் எழுதியிருக்கிறார்கள், இருமல் இருந்து கொண்டிருப்பதற்கு காரணம் காந்தியடிகள் எவ்விதமருந்தும் உண்ணமாட்டேன் என்று கூறிவிட்டது தான் பென்ஸிலின் என்னும் மருந்தை உபயோகித்திருந்தால் மூன்று நாட்களில் குணமாகிவிடும் என்றும் இல்லையானல் மூன்றுவாரங்கள் ஆகும் என்றும் டாக்டர் சுசிலா நய்யார் கூறினர்.

அதற்குக் காந்தி அடிகள் கீழ் கண்டவாறு கூறினர் பென்ஸிலின் குணப்படுத்தும் என்பதை நான் சந்தேகிக்கவில்லை ஆயினும் சகலநோய்களுக்கும் "ராமநாமமே" சஞ்சீவிபோன்ற மருந்து என்பது என்னுடைய நம்பிக்கை எங்குபார்த்தாலும் நெருப்பே என்னைச்சூழ்ந்து காணப்படுகிறது, இந்தநிலைமையில் தேவையாயிருப்பது, கடவுளிடம் அசையாத நம்பிக்கையே கடவுள் ஒருவர்தான் தியை அணைக்க உதவி செய்ய முடியும்.

கடவுள் என்னைக்கொண்டு ஏதேனும் செய்ய விரும்பினல் என்னைக் காப்பாற்றவே செய்வார், இல்லையானல் என்னை அழைத்துக் கொள்வார் அதனுல் என்னைக்காப்பாற்றும் பொறுப்பு அவருடையது அதனுல் என் உடல் நோய்க்கு எவவித மருந்தும் உண்ணமாட்டேன்.

## அஹிம்சையே அடிப்படை

அன்பிலும் அஹிம்சையிலும் நம்பிக்கை கொள்ள வேண்டுமானல். ஆண்டவன் இருக்கிறன் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை வேண்டும் இங்கு ஆண்டவன் என்று நான் குறிப்பிடுவது, பிற உதவியின்றி இயங்கும் "ஜீவ சக்தி." உலகிலுள்ள மற்ற எல்லாசக்திகளுக்கும் ஆதாரமாக இருக்கும் மகாசக்தி.

மற்றச் சக்திகளெல்லாம் மறைந்த பின்பும் நிறைந்திருககும் மேலான சக்தி, எதிலும்பரவியுள்ள இந்த 'ஜீவஒளி'' இன்றிநான் உயிர்வாழ்வதற்கு எவ்வித முகாந்தரமும் என்றல் கூற முடியாது.

ராமராஜ்யம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணச்சிரம தர்மம்

முற்றொடர் ச. பொ

யயாதிமகாராஜாவானவர் சொல்லிய நல்லநெறிகளைக் கேட்ட அப்பௌத்திரர்கள் அந்தரலோகத்திலிருந்து நன்முயற்சி செய்து பெறற்கரும் பேறு பெற்றார்கள்

மேலே சொல்லிய ஆச்சிரம விதிகளில் யயாதிமகாராஜா தமது பௌத்திரர்களுக்குச் சொல்லிய கிரகஸ்தாச்சிரமம் மிகவும் கவனிக்கத்தக்கவை

மேலும் திருக்குறளில் வள்ளுவப்பெருந்தகை சொல்லிய இல்வாழ்க்கை யென்னும் அதிகாரத்தில் வரும் பத்துக்குறள் வாக்கியத்தை மாத்திரம் பொருளுணர்ந்து இல்லாச்சிரமி கடைப்பிடித்து வந்தாலுமே ஆத்மஞானமடைந்த ஜீவன் முத்தனுவான். மேற்படி அதிகாரத்திலுள்ள பத்துக்குறள் வாக்கியத்தின் பொருள் வருமாறு

1 வது இல்லறத்தில் வாழ்வபனுகச்சொல்லப்படுகிறவன் அறத்தின் இயல்பையுடைய மூவர்க்கும் நல்வழியில் நிலைபெற்ற துணையாவான்

2 வது துறந்தவர்க்கும் வறியவர்க்கும் தன்னிடத்தில் வந்திறந்தவர்க்கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்கின்றவன் துணையாவான்

3 வது தென்புலத்தார் தெய்வம் விருந்தினர் சுற்றத்தார் தான் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவருமல் போற்றுதல் சிறந்த கடமையாகும்

4 வது பொருள்சேர்க்கும்போது பழிக்கு அஞ்சிச் சேர்த்துச் செலவுசெய்யும்போது பகுத்து உண்பதை மேற்கொண்டால் அவ்வாழ்க்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவதில்லை

5 வது இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானல் அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவேயாகும்

6 வது ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி வாழ்வானுனல் அத்தகையவன் வேறுநெறியில் சென்றுபெறத்தக்கது என்ன

7 வது அறத்தின்இயல்போடு இல்வாழ்க்கை வாழ்கின்றவன் வாழ முயல்கின்ற பலருள்ளும் மேம்பட்டு விளங்குகின்றவன் ஆவான்

8 வது மற்றவரையும் அறநெறியில் ஒழுகச்செய்து தானும் அறம் தவறாத இல்வாழ்க்கை (வாழ்வது) தவஞ்செய்வாரைவிட மிக்க வல்லமையுடைய வாழ்க்கையாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 வது அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையேயாகும் அதுவும் மற்றவன்பழிக்கும் குற்றமில்லாமல் விளங்கினால் மேலும் நன்மையாகும்

10வது உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன் வானுலகத்தில் உள்ள தெய்வமுறையில்வைத்து மதிக்கப்படுவான்

ஆகவே இகத்தில் அகத்துறவு புறத்துறவு பூண்டு இல்லாச்சிரமத்தில் இருந்து கொண்டே தாமரையிலையில் நீர்போல்பற்றற்றவாழ்வு நடத்துபவர்கள் மிகச்சிலரே அவர்களையே சிவன் முத்தரெனவும் ஏழாம்பூமி கைவந்தவரெனவும் ஞானநூல் கூறும்

மழித்தலும் நீட்டலும் வேண்டா - உலகம்
பழித்ததை ஒழித்து விடின் - வள்ளுவர்
இல்லறமல்லது நல்லறமன்று -ஔவையார், மேலும் ஜாதிஇரண்டொழிய வேறில்லையென ஔவையார் கூறிய நீதிவழுவா நெறிபற்றிவாழ்வோர் பெரியர் உயர் குலத்தோரெனவும்

நீதிவழுவா நெறிபிறழ்ந்து வாழ்வோர் சிறியர் இழிகுலத்தோரென்பதுமே

மேலே கூறப்பட்ட அறிவுரைகளிலிருந்து நாம் அறியக்கிடப்பது வர்ணதர்மம் கிரகஸ்தாச்சிரமத்தாராகிய பொருளீட்டும் ஆச்சிரமத்தார்க்குமட்டும்உரியவையேயெனவும் மற்றய மூன்று ஆசிரமிகளும் இல்வாழ்வாரையே யாவற்றிற்கும் எதிர்பார்த்திருக்கவேண்டுமென்பதும் பெறப்படுகின்றன

வருணாச்சிரமமானது யயாதிமகாராஜா சொல்லிய வண்ணம் முதலாவது:- பிரமசரிய விரதத்தை முறைப்படி சரிவரநடத்தியவர் ஞானநிலை அடைவரெனவும் இரண்டாவதாக:- கிரகஸ்தாச்சிரம விதிகளை ஒழுங்குடன் முறையே தவறாது அனுஷ்டித்து வாழ்ந்தவர்களும் ஞானநிலை அடைவரெனவும் மூன்றாவது:- வானப்பிரஸ்தாச்சிரம விதிகளை முறையே தவறாது அனுஷ்டித்தவர்களும் ஞானமடைவரெனவும் நான்காவது:- அகத்துறவு புறத்துறவு பூண்டு சன்னியாசம் பெற்ற ஞானவான்கள் இவர்களில் நால்வகையினர் உளர் என்றும் ஞானநூல் கூறும் முறையே

| | | |
|---|---|---|
| ஜீவன் முத்தர்கள் | பிரமவித்து | எனவும் |
| ,, | பிரமவரன் | ,, |
| ,, | பிரமவரியான் | ,, |
| ,, | பிரமவரிட்டன் | ,, கூறும் |

இவர்களில் ஜீவன் முத்தர் உலகோர்க்குப் பயன்படுபவர் மற்ற மூவரும் மௌனநிலையினை உடையவர்

மேற்படி ஜீவன் முத்தர் லட்சணத்தைப்பற்றி ஞானவாசிட்டத்திதிப்பிரகாரணத்தில் ஏழுசெய்யுள்களில் விளக்கியிருக்கிறார் அவை பின் தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி என்ற வாரப்பத்திரிகையில்
## 25-12-32ல் ஒரு அன்பரின் கேள்வி மகாத்மாஜீ பதில்

தெய்வம்துணைகாட்டுகிறதென்றும் ஆன்மகட்டளையென்றும் நான் அடிக்கடி கூறுவதின் கருத்தென்னவென்றும் "ஒவ்வொரு வரும் வெவ்வேறு விதமாக ஆன்மாவின்கட்டளையென்று கூறிக் கொண்டு பற்பலவிதமாக நடந்து கொண்டால் முடிவில் உல கத்தின் போக்கு எவ்விதம் முடியும் என்றும் சிலர் என்னைக்கேட் கின்றனர்.

### பதில் மகாத்மாஜீ

இது நியாயமான ஓர் கேள்வியே எல்லாரும் இவ்விதம் வெளி க்குக் கூறலாம் ஆனால் ஒருசிலரே தன் நேர்மையை நிரூபிக்க முடியும் தெய்வத்தின் கட்டளையோ, அன்றிஆன்மாவின் தூண்டு தலோ இன்றிஒருவன் பொய்யாக வெளிக்குமட்டும் கூறுவானா னால் அவன்கதி அதோகதிதான்

ராஜாவின் பெயரால் சிலகாரியங்களைச் செய்வதாகப் பொய் கூறுபவர்களின் கதியைவிட இவர்கள்கதி மோசமாகிவிடும் ரா ஜாவின் பெயரைத் துஷ்பிரயோகஞ் செய்தது வெளிப்பட்டுவிடு மாயின் அவருக்குத்தேகத்தில் சிலகாயங்களுடன் தப்பிவிடலாம்

ஆனால் தெய்வத்தின் கட்டளையென்று பொய் கூறுபவர்களின் தேகம் மட்டும் நசிப்பதன்று ஆன்மாவும் அல்லல்பட வேண்டி யதே நான் ஏதோ மனப்பிரேமையுடன் காரியங்களைச்செய்து வருவதாக மற்றும் சிலர் கூறுகின்றனர் அவ்விதம் நான் செய் வேனாகில் பொய்யாக நடிப்பவர்களின் கதியே எனக்கும் அனேக மாக ஏற்படவேண்டும்.

ஸத்தியசோதனையில் ஈடுபட்டுள்ள தாழ்ந்தோனாகிய நான் மிகவும் ஜாக்கிரதையாகவும் நேர்மையாகவும் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது இதைப்பற்றி நான் அதிகம் கூறவிரும்பவில்லை தெய்வமே கதியென்று பரிபூரணமாக நம்பியவர்களின் வாழ்க் கையைக்கடவுளே முன்னின்று நடத்துகிறர் "தான்" என்பது நீங்கி சகலமும் "அவனே" என்று உள்ள உத்தமர்கள் மூலமாகக் கடவுளே எல்லாக்காரியங்களையும் செய்கிறரென "கீதை" முறையிடுகிறது

இவ்விஷயத்தில் மனோப்பிரேமையென்பதில்லை ஓர் சாதாரண சத்தியத்தை நான் கூறியுள்ளேன் இதையாவரும் பரீட்சிக்கலாம் ஆனால் உறுதியும், ஊக்கமும், சாந்தமும், அவசியமாகும் நான் கூறுபவைகள் நேர்மையானவையா என்பது சற்றே அமைதியு டன் யோசித்தால் புலனாகும். (மகாத்மாஜீயின் மணிமொழி எவரும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைக்கு வர்ணமுண்டோ

சுவாமி விபுலானந்தர் நவசக்தி வாரப்பத்திரிகை வெளியீடு

❋

இவ்விடயத்தைப்பற்றி இந்தநாட்டிலும் பிறநாட்டிலுமுள்ள அறிஞர்பலர் ஊன்றியாலோசித்து வருகின்றனர்

இந்தியாவின் கஷ்டநஷ்டமனைத்திற்குக்கும் வருணபேதமே காரணமென்பர் ஒருசாரார் வர்ணாச்சிரமதர்மம் நிலைபெற்றிருந்தகாலத்தில் இந்தியா தன்னரசு நாடாகச் சிறப்பெய்து விளங்கிற்று ஆதலால் இக்காலத்தில் நிலைகுலைந்து சீரளிந்து கிடக்கிற வருணாச்சிரமத்தை நிலைநிறுத்தலே இந்தியா முன்னேற்றமடைவதற்குரிய வழியாகும் எனவாதிப்பார் மற்றொருசாரார்

## சுவாமி விபுலானந்தர் எழுதியவை

இங்ஙனம் ஒன்றுக் கொன்று நேர்விரோதமான அபிபபிராயங்கள் தேசத்திற்பரவியிருப்பதினாலே சமூகவாழ்க்கையில் ஒருவகைக்கலக்கம் ஏற்பட்டிருக்கிறது.

நமது தாய்நாட்டில் மாத்திரமல்ல உலகத்தின் நானுபாகங்களிலும் வகுப்புச்சண்டை மும்முரமாகப்பரவி வருகின்றது பிறப்பினாலெய்திய சாதிச்சண்டை திருவேங்கடமலைக்கும் கன்னியாகுமரிக்கும், இடையிற்றலையெடுத்து ஆரவாரிக்கின்றது நிறத்தினாலெய்திய சாதிச்சண்டை வெள்ளைமனிதனுடைய ஆழுகைக்குட்பட்ட உஷ்ணவலயதேசங்களிற்குடிகொண்டு உறுமுகின்றது

பணத்தினால் விளைந்த சாதிச்சண்டை கோடீசுவரர்கள் ஆயிரக்கணக்காக வசிக்கும் அமெரிக்காக்கண்டத்தில் ஆர்ப்பரிக்கின்றது தறுகண்மையாலெய்திய ஜாதிச்சண்டை நிராயுதராசிய மக்கள் வசிக்கும் நாட்டினைச்சூழ விருக்கும் ஆயுதபாணிகளிடையே புலவுகின்றது இத்தனைசாதிபேதங்கள் உலகத்தில் நிலவும்போது சமத்துவம் சகோதரத்துவம் என்பன உரையளவாகிய முடிவுகள்தாமோ எனஐயப்படவும் இடமுண்டு

## உலகப்போக்கு

உலகப்போக்கை உற்றுநோக்கும்போது குலம்குப்பையிலே பணம்பந்தியிலே என்றபடி ஜனங்கள் பிறப்பினாலெய்திய உயர்வினைப்பாராட்டி வருவதைக்காண்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருட்டுத்தனத்திளுலோ வஞ்சனையிளுலோ பிறவாற்ருலோ ஒருவன் பணந்தேடிவிட்டால் அவன் பெரியவளுக மதிக்கப்படு கின்ருன் இவ்வளக்கம் ஐரோப்பா அமெரிக்கா முதலிய உலோகாயுத தேசங்களில் மாத்திரமல்லப் புண்ணியபூமியாகிய நமது பரத கண்டத்திலும் நிரம்பியிருக்கின்றது இக்கொள்கையினுல் விளைகின்ற தீமைகள் எவை என

நாம் உற்று நோக்குவோமாயின் இக்கொள்கை நிலைபெற்றிருக்கின்றவிடங்களிற் பணத்தைத் தேடுவதற்கு உபயோகமாகின்ற வஞ்சனை சூது முதலிய தீச்செயல்கள் தீச்செயலராகக் கருதப்படுவதைக் காண்போம்

## நிறத்திமிர்

இனி நிறத்திளுல் உயர்வு பாராட்டும் வெள்ளைமனிதன் நாற்பதுகோடி (நீக்கிரோவ்) கறுப்புமனிதரையும் நாற்பதுகோடி (மங்கோலிய) மஞ்சள்மனிதரையும் முப்பதுகோடி (இந்திய) கபிலவர்ணமனிதரையும் தமக்கு இயல்பாகவேற்பட்ட சத்துருக்களாக மதித்துவெடி குண்டிளுலும் பிறவற்ருலும் அன்ளுரை அடக்கியாளுவதற்கு முயல்வதைக்காண்போம்

தனுகண்மையாலெய்திய வகுப்புச்சண்டையிற் கொடுமையைக் கடந்துபோன மகாயுத்தத்திற்கண்டோம் உயர்வும் தாழ்வும் உலகத்தில் இயல்பாக அமைந்திருக்கின்றன பணத்திளுலும் நிறத்திளுலும், தனுகண்மையிளுலும் அளந்து நிச்சயிக்கப்படுகின்றன உயர்வு தாழ்வானது பாவச்செயலைப் பெருக்கிச் சமூக வாழ்க்கையை நிலைகுலைத்து உலகத்தைப்பெரியதொரு போர்க்களகமாக்கும் என்பதை நாம் நேரிற்கண்டு கொண்டோம் ஆதலிளுல் மேலைத்தேசத்துச் சமூகவாழ்க்கையில் அமைந்திருக்கும் வகுப்புச்சண்டைகளை நமது தேசத்திற் புகுத்துவதற்கு விரும்போம்

நமது தேசத்திற்றொன்று தொட்டு வழங்கிவருகிற பிறப்பிளுலெய்திய சாதிபேதத்தை யொழித்து விடுவோமாயின் ஏனையவற்று ளொன்று நமது சமூக வாழ்க்கையில் உட்புகுந்துவிடுமென்று, அஞ்சவேண்டியிருக்கிறது அப்படியல்ல அனைவரும் சகோதரராக ஒற்றுமைப்பட்டு வாழ்வோம்

உயர்வு தாழ்வு என்னும் எண்ணமே வேண்டாம் என்ருல் தேவருலகத்திலும் தேவேந்திரன் அட்டவசுக்கள், முதலியோர் உயர்ந்தோரெனக் கொள்ளப்படுகின்ற உயர்வு தாழ்வுக் கொள்கை யேற்பட்டிருக்கும் போது இந்த மண்ணுலகத்து மாந்தர் பூரண சகோதர தத்துவத்தையடைந்து இன்புற்றிருப்பாரென நம்புதற்குளதோ என்போம்

அங்ஙனமாயின் சமத்துவப்பேச்சு வீண்பேச்சோ என்று மற்ருெருவிளு எழுகின்றது இவ்விஷயத்தைப் பின்னர் ஆராய்வோம்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருநெறி விளக்கம்

## இராமகிருஷ்ண பரமஹம்சர் (முற்தொடர்)

# சமய இயக்கங்கள்

கேசவரே ஒரு சமாஜத்தை நீர் நிறுவியிருக்கிறீர் நீர் மட்டும் என்ன உசத்தி நாம் ஏன் மற்றொரு சமாஜத்தை நிறுவலாகாது என்று விஜயர் எண்ணி வருகின்றார் ஆதலால் தன்போக்கில் அவர் மற்றொரு சமாஜத்தை உண்டுபண்ண ஊக்கம் கொண்டிருக்கிறார் என்றார் இக்கூற்றைக் கேட்டதும் கூடியிருந்தவர்கள் எல்லோரும் நகைத்தார்கள்

ஸ்ரீ ராமனுஜாச்சாரியார் ஒரு தீவிரமான விசிஷ்டாத்வைதவாதி குருவுக்கும் சிஷ்யருக்குமிடையில் அவரவர் கொள்கையின் உயர்வைப் பற்றி ஆழ்ந்த விவாதங்கள் வந்துவிடும் தத்தம் மதத்தை மேலானதென்று நிலைநாட்ட ஒவ்வொருவரும் முயன்று வந்தனர் இத்தகையவேற்றுமை அடிக்கடி நிகழ்ந்து விடுவதுண்டு ஆயினும் சிஷ்யன் ஒருவனுக்குத் தக்குருவானவர் யாண்டும் குருவாகவேயிருந்து வருகிறார்

அபிப்பிராய வேற்றுமையை மன்னிவிட்டுக் குரு சிஷ்ய இணக்கம் தலைப்பட்டுவிடுவதில்லை இங்ஙனம் பரமஹம்சர் பகர்ந்த மேலாம் கோட்பாடுகளுக்கு இசைமைத்து வந்த பிரம்மோசமாஜத்து அன்பர்கள் பரமானந்தத்தில் மூழ்கியிருந்தனர் பிரம்மோசமாஜத்துத் தலைவராகிய கேசவ சந்திரசேனரிடம் பரமஹம்சர் மற்றொரு விஷயத்தை எடுத்துரைத்தார்

மக்களுடைய இயல்பு இன்னது என்று தெரிந்து கொள்ளாமல் நீர் அவர்களை சிஷ்யர்கள் ஆக்குகின்றீர் சிறிது நாளில் அவர்கள் மனம் மாறியவர்களாக உம்மிடமிருந்து பிரிந்து ஓடிவிடுகின்றனர் வெளித்தோற்றத்துக்கு மக்கள் எல்லாம் மக்களாகவே தென்படுகின்றனர்

"கொழுக்கட்டை என்னும் பதார்த்தத்தை நீர் பார்த்திருக்கின்றீர் அதன் மேற்பகுதி எல்லாம் ஒரேபாங்குடையதாக இருக்கின்றது ஆனால் அதனுள்ளே விதவிதமான பொருட்கள் வைத்து அது சித்தப்படுத்தப் படுகின்றது தித்திப்பு பண்டங்கள் காரப் பண்டங்கள் விதவிதமான தானியவகைகள் உள்ளே வைத்து அது அமைக்கப்படுகின்றது [illegible] பாங்கும் அத்தனையதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளைச் சார்ந்திருப்பவர் இயல்பு

விஷயத்தில் நான்
சிஷ்யர் குளாம் முன்னைறத்திரட்டும் அறிந்திருக்கிறீரா நான்
கொண்டுள்ள கருத்துயாது என்பதை அன்னையைச் சார்ந்திருப்பதைத்
உண்டு உடுத்து இன்புற்றிருந்து அன்னையைச் சார்ந்திருப்பதைத் மேற்கொண்டு ஆகவேண்
தவிர வேறு ஒன்றையும் அறியேன் அறிகிருள் அதைக்குறி
டிய காரியங்களை அன்னைபராசக்தி எதற்காக என்னேடு
த்து நான் திட்டங்கள் பலபோடுவது ஆசாரியன் என்றே
பழகுகின்றவர்கள் என்னைக்குரு என்றே வாழால் கூத்துவது
தலைவர் என்றே யாராவது அழைத்தால்
போன்று அச்சொற்கள் என்னைத் துன்புறுத்துகின்றன

சச்சிதானந்தப்
குரு என்னும் சொல்லுக்கு இலக்காகச் அனைத்துக்கும்
பரம்பொருள் ஒருவரே இருக்கிருர் உயிர்கள் கடவுளிடம் நான்
பாடம்புகட்டும் பரமகுரு அவர் ஒருவரே கொண்டுள்ள
கொண்டுள்ள இணக்கம் சேய் ஒன்று தாயிடம்
இணக்கத்துக்கு ஒப்பானது

மானுடர்கள்
இன்னும் ஜீவபேதத்தில் உழன்று கிடக்கும் முந்துகின்றுர்கள்
குருஸ்தானத்தை வகிக்க நாற்றுக்கணக்கில் காண்பது
ஆனல் முறையாக சிஷ்யனுக அமைய விரும்புபவனைக் அமர்ந்
தான் அரிதினும் அரிது மற்றவர்களுக்குக் குருவாக செயல்
திருப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல கடினமான வகிக்க
களுக்கெல்லாம் அநுமிகக்கடினமானது குருஸ்தானத்தை என்றுங்
மனிதன் எப்பொழுதாவது தகுதியுடையவன் ஆகின்றுஞ
கேள்வி எழக்கூடும்

ஆம் அவன் தகுதியுடையவன் ஆகுங்காலம் ஒன்று உண்டு
கடவுளே அவனுடைய மனத்தகத்து எழுந்தருளியிருந்து அவ
னுக்கு ஆதேசத்தை நல்குவாராகில் அப்பொழுதே அவன்
கடவுளுடையகையில் கருவியாக இருந்து கொண்டு "குரு"
ஆற்றவேண்டிய அரியசெயலைச்செய்து முடிக்கவல்லவனுகின்றுன்

பண்டைக்காலத்தில் வாழ்ந்திருந்த நாரதர் சுக தேவர்
போன்ற பெருமக்கள். அத்தகைய ஆதேசத்தை இறைவனிட
மிருந்து பெற்றிருந்தார்கள் இடைக்காலத்தில் தோன்றியருளிய
சங்கரருக்கும் அத்தகைய ஆதேசம் உண்டாயிருந்தது ஆதலால்
தான் ஜகத்குரு என்னும் சொல்லுக்கு இலக்காக அவர் அமைந்
திருந்தார் இறைவனுடைய ஆதேசம் உமக்கு வந்து அமையாவிட்
டால் உம்முடைய சொல்லுக்குச் செவிமடுக்க யார்தான் மன
முவந்து முன்வருவார்கள் ... ... மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தர்

## வினையாற்றும் விதம் முற்தொடர்

தூய அன்பு எதுஎன்பதை அறிந்து கொள்ளுதல் மிகக்கடினமானது ஆசையின் வசப்பட்டிருப்பவனுக்குத் தூய அன்பு இல்லை ஆசைகள் அனைத்திடத் திருந்தும் முத்தியடையாதவனுக்குத் தூய அன்பு உதயமாவதில்லை

அடிமை ஒருவனுக்குத் தன்னைக்கட்டி ஆளுகின்றவனிடத்து உண்மையான அன்பு ஒருபொழுதும் உண்டாவதில்லை அடிமை ஒருவனை விலைகொடுத்து வாங்கி அவனைச்சங்கிலியில் கட்டிவைத்துக் கொண்டு வேலைவாங்கினுல் அவன் வேலைசெய்வது திண்ணம். ஆனுல் அவன் மகிழ்வுடன் வேலைசெய்யமாட்டான் சலித்துக்கொண்டு மனமும் தேகமும் நொந்து போனவனுகை அவன் வேலை செய்வான் அத்தகைய வினை அன்பினின்று உதிக்கதன்று தூயஅன்பை அந்த அடிமையினிடத்து இருந்து எதிர்பார்த்தல் வீண்,

அந்த அடிமை நிலையில் நம்மில் பலபேர் இருக்கின்றனர் உலகப்பொருள்கள் பலவற்றிற்கும் போகங்கள் பலவற்றிற்கும் நம்மிற் பலபேர் அடிமைகளாக ஆகிவிட்டார்கள் பொருளாசையும்போகத்தில் ஆசையும் நம்மைகட்டிக் கதனைத்திருக்கும் தளைகள் ஆகிவிட்டன, அவ்வாசைகளின் வசப்பட்டு நாம் வினை ஆற்றுகிறோம்.

ஆதலால் நம்மிடத்து உண்மையான அன்பைக்காண முடியாது உண்மையான தொண்டு புரிபவர்களும் நாம் அல்லர் பலபேர் தங்களுடைய உற்றார் உறவினர்களுக்காக என்றும் நண்பர்களுாகாக வென்றும் வினை ஆற்றுகிறுர்கள்.

அப்படி அவர்கள் உழைப்பதைத் தொண்டு என்று சொல்லலாகாது பந்தபாசத்தில் கட்டுண்டுகிடந்தவர்களாக அவர்கள் செயல் புரிகின்றனர் இன்னும் பலர் தங்களுடைய சுயநலத்திற்காகவென்றே உழைக்கின்றனர், எங்குபற்றுதலும் சுயநலமும் இருக்கின்றதோ அங்கு தொண்டிக்கு இடமில்லை சுயநலத்தால் தூண்டப்பெற்றுச் செய்திருக்கின்ற செயல்கள் அனைத்தும் அடிமையினுடைய செயலாம்

சுயநலப் பற்றுதலுடன் செய்கின்ற செயல் எது என்பதையும் சுயநலப் பற்றற்றுச் செய்கின்ற செயல் எது என்பதையும் அறிந்து கொள்வதற்கு உபாயம் ஒன்று உளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றற்றுச் செய்கின்ற (தொழில்) செயல் ஆனந்தத்தை உண்டுபண்ணுகிறது மனத்தகத்து அமைதி மேலும் மேலும் அமைகிறது பற்றற்றுப்பணி விடைபுரிகின்றவன் அருள் நிலைக்கு அருகதை உடையவனுகின்றான் வாழ்வில் போலிவாழ்வென்பதும் பெருவாழ்வு என்பதும் ஒன்றோடொன்று ஒவ்வாத வகைகள்

பரநலத்துக்கென்று வாழ்பவனே பெருவாழ்வு வாழ்கின்றான் சுயநலத்துடன் வாழ்பவனுக்குக் கிட்டுவது போலி வாழ்வு பெருவாழ்வு மெய்யறிவை வளர்க்கிறது பெருவாழ்வு வாழ்கின்றவனுக்குத் தூய அன்பும் உள்ளத்தில் உரு எடுக்கிறது

(முற்றும்)

# குறிப்புரை

முதலாவது மலர் முதலாவது இதழின் தொடர்விஷயங்கள் இரண்டாவது இதழிலும் தொடர்ந்து முடிவு பெற்றும் மேலும் மேலும் புதியதொடர் விஷங்களும் இடம்பெற்றுள்ளன அவை மூன்றுவது இதழிலும் அதற்கு மேலும் தொடரப் பெறும் இந்த இரண்டாவது இதழில் மகாத்மாஜீயின் சத்தியதரிசனம் கல்விக்கொள்கை? இயற்கைச்சிகிச்சை பற்றியும் கிராமசஞ்சீவி பற்றியும் எழுதப்பட்டிருப்பவை ஆழ்ந்து சிந்திக்கத்தக்கவை

மேலும் மூன்றுவது இதழ் பதுவருட சித்திரை இதழில் மகாத்மாஜீயின் கடவுளின் அபாரசக்தியென்னும் (ஹைக்கோட்) பிரசங்கத்தில் அரும் கருத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன அவற்றை எவரும் அவசியம் பார்க்கவேண்டியவை அன்பர்கள் இன்னும் சத்தியநெறிவாயிலாக அரியவிஷயங்களைக் காண்பாராக

மகாத்மாஜீ மேலும் வருணாச்சிரமதர்மம் பற்றி நவசக்தி பத்திரிகையில் பிராமணர் பிராமணரல்லாதார் வினவிடையாக 1927-ம் ஆண்டு தென் இந்தியா சுற்றுப்பயணத்தின்போது பல அன்பர்கள் கேட்ட கேள்விகளுக்கு விடைகூறியதும் மேலும் தென்னுட்டில் அவர் பல இடங்களில் செய்த அரும்பெரும் விளக்கங்களும் தொடர்ந்து வரும் என்பதையும் வாசகர்களுக்கு அறியத்தருகிறேன்

இங்ஙனம்
தொகுத்து வெளியிடுபவர்
ச. பொன்னுத்துரை
24/1 வண்மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் (முன்தொடர்)

6. அவனையொழிய வமரருமில்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவமின்லை
அவனன்றி மூவரால் ஆவதொன்றில்லை
அவனன்றியூர் புகுமாறறியேனே

7. முன்னையொப்பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப்பாமென்னிலப் பனுமாயுளன்
தன்னை யொப்பாயொன்று மில்லாத்தலைமகன்
பொன்னை யொப்பாகின்ற போதகத்தானே

8. தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினு மீசனருளறிவாரில்லை
சேயினு நல்லனணியன் நல்லன்பார்க்கு
தாயினு நல்லனந் தாள்சடையோனே

9. பொன்னாற் புரிந்திட்ட பொற்சடையென்னப்
பின்னாற் பிறங்கவிருந்தவன் பேர் நந்தி
என்னாற் தொழப்படு மெம்மிறை மற்றவன்
தன்னாற் தொழப்படுவாரில்லை தானே

10. தானே இருநிலந் தாங்கிவிண்ணாய் நிற்கும்
தானேசுடுமங்கி ஞாயிறுந் திங்களுந்
தானே மழைபொழி தையலுமாய் நிற்குந்
தானே தடவரைத் தண்கடலாகுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிகடுகம்

வருவாயுட் கால்வாங்கி வாழ்தல் செருவாய்ப் பச்
செய்தவை நாடாச்சிறப்புடைமை—யெய்தல்
பலநாடி நல்லவை கற்றலிம் மூன்றும்
தலைமாட்சி நல்லவர்கோள்

இதன்பொருள்:- தமக்குவரும் பொருள்களிலே நாலிலொரு பங்கு தருமத்திற்செலவு செய்து வாழ்தலும் போரினிடத்து வெற்றி கிடைக்கத் தான்செய்த காரியங்கள் ஆராயாதபடி யாவர்க்கும் விளங்கித்தோன்றும் சிறப்புடையனாதலும் திரம்பப் பலவற்றையும் ஆராய்ந்து அவற்றுள் நல்லவைகளைக் கற்றலும் இம்மூன்றும் நற்குணநற்செய்கைகளால் பெருமை பெற்ற நல்லவர்களுடைய கொள்கைகளாம். (தன்னனுபவத்திற்கு இரண்டு பங்கும் ஆபத்திக்கு ஒருபங்குமாகப் பங்கிட்டுவைக்க வேண்டுமென்று பொருள் நூலிலே சொல்லுதலால் அறத்திற்கு நாலிலொரு பங்கு சொல்லப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய நெறி

வள்ளுவர்.

''கற்க கசடறக் கற்றவை—கற்றபின்
நிற்க அதற்குத் தக,,

ஔவையார் :

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப—இவ்விரண்டும்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு

இப்பிரசுரம் யாழ்ப்பாணம் வண்-மேற்கு சிவப்பிரகாசம் ரோட் 24/1 சு:பொன்னுத்துரை அவர்களால் தொகுக்கப் பெற்று வே. பொ.சச்சிதானந்தன் அவர்களால் வண்ணார்பண்ணை தமிழ்நாடு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்று வருவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org